

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு திசையன்விளை நேருஜி திடலில் இருந்து மாபெரும் அமைதிப் பேரணி நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது.உடன் முன்னாள் எம்.பி ஞானதிரவியம், கிரகாம்பெல், ஆ.பிரபாகரன், ஆவின் ஆறுமுகம், அலெக்ஸ் அப்பாவு, ஜோசப் பெல்சி, ஜெகதீஷ்,சுடலைக்கண்ணு,செல்வ கருணாநிதி, ஜான்கென்னடி, ஜான் ரபீந்தர், எரிக்ஜூடு, முருகன், சுயம்பு ராஜன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர். நிகழ்ச்சி நிறைவில் பழைய பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தென்காசி நகர தி.மு.க.ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு தென்காசி காந்தி சிலை முன்பிருந்து அமைதிப் பேரணி தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நகர செயலாளர் சாதிர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் சுந்தரமகாலிங்கம்,சேக்தாவுது, ஆறுமுகச்சாமி,அப்துல்காதர், கனிமொழி,கென்னடி,ரஹீம், சாமிதுரை,சீனித்துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.பேரணி ரதவீதி சுற்றி வந்து காந்தி சிலை முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டி ருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## மாவட்ட வேளாண்மை (வேளாண் வணிகம்)

# துணை இயக்குநர்கள்-விற்பனைக்குழுச் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டம்

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது!

**சென்னை, ஆக.9-**

**வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று (08.08.2024) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் செயல்பாடுகளை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மற்றும் விற்பனைக்குழு செயலாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.**

இக்கூட்டத்திற்கு வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர், வேளாண்மை - உழவர் நலத் துறை செல்வி. அபூர்வா, முன்னிலை வகித்தார்கள்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் தனது உரையில், விளை பொருட்களை சேமித்து வைத்து உயர்ந்த விலை கிடைக்கப்பெறும் காலங்களில் விற்பனை செய்திட ஏதுவாக மாநிலம் முழுவதும் 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 525 சேமிப்புக்கிடங்குகள் உள்ளன. இவற்றின் மூலம் 4 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்களை சேமித்து வைக்கலாம். நடப்பாண்டில் இதுவரை ரூ.3,225 கோடி மதிப்புள்ள 9.63 இலட்சம் மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. பொருளீட்டுக்கடனாக விவசாயிகளுக்கு ரூ. 22.13 கோடியும், வணிகர்களுக்கு ரூ.1.68 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. சந்தை செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தும் வகையில் 157 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் மின்னணு தேசிய வேளாண் சந்தைத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 56 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வசதிகளை முழுமையாக பயன்படுத்தி நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்வதற்கு தேவையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும், விவசாயிகளுடன் அலுவலர்கள் நல்ல தொடர்பில் இருந்திடவும், விவசாயிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளை செய்திடவும், விவசாயிகள் மற்றும் வணிகர்களுக்கு பொருளீட்டுக் கடன் அதிகமாக வழங்கிடவும், மின்னணு வேளாண் சந்தை மூலம் பரிவர்த்தனை மேற்கொள்ளவும் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அனைத்து விற்பனைக் கூடங்களும், கழிவறைகளும் சுத்தமாகவும் தூய்மையாகவும் சிறந்த முறையில் பராமரித்திட துரித நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், அனைத்து வணிக நிறுவனங்களையும் முறையாக அழைத்து பேசி விளைபொருட்களை வேளாண்மை விற்பனைக் குழு மூலம் கொள்முதல் செய்திட நடவடிக்கை எடுத்திடவும், ஒவ்வொரு கிராமசபை கூட்டம் மற்றும் விவசாயிகள் குறைத் தீர்க்கும் கூட்டத்தில் இத்துறையின் செயல்பாடுகளை விளக்கிடவும், மின்னணு வேளாண் சந்தை மூலம் பரிவர்த்தனை செய்யும் விவசாயிகள் மற்றும் வணிகர்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்திடவும் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

சிறு மற்றும் குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்கள் கூட்டாக பயிர் சாகுபடி திட்டம் தயாரித்து அதற்கு தேவையான இடுப்பொருட்களை மலிவு விலையில் பெற்று உற்பத்தி செய்யும் விளைப்பொருட்களை ஒருங்கிணைத்து நல்ல விலைக்கு விற்பனை செய்திடவும் மேலும் அதிக வருமானம் பெறுவதற்கு விளைப் பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதற்கும், 397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் விதமாக ஆதார நிறு வனங்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக திட்டம் தயாரித்து அவர்கள் விளைப்பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதற்கும், உள்ளூர், மாநில, தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளில் விற்பனை செய்வதற்கும் வழிவகை செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்கள். உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை திறமையான நிறுவனமாக உருவாக்கிட திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கிடவும் அறிவுரை வழங்கினார்கள்.

கிராமப்புறங்களில் தேவைப்படும் சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள், சிப்பம் கட்டும் வசதிகள், தரம் பிரிப்பு வசதிகள் போன்றவற்றை வேளாண் கட்டமைப்பு நிதி (Agri Infrastructure Fund) மூலம் தனியார் நிறு வனங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் உருவாக்கிடும் பொருட்டு வங்கிகளில் பெறப்படும் ரூ.2 கோடி வரையிலான கடன் மீது 7 ஆண்டுகளுக்கு 3 சதவீத வட்டி மானியம் வழங்கப்படுகின்றது. இதுவரை, 6,854 நபர்களுக்கு ரூ.1,950 கோடி கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களான காய், கனிகளை இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்யும் வகையில் தற்போது தமிழ்நாட்டில் 192 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. உழவர் சந்தைகளில் வரத்தினை அதிகரித்திட தோட்டக் கலைத் துறையும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையும் இணைந்துதேவையான நடவடிக்கைகளை எடுத்திட அறிவுறுத்தினார்கள்.

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைக்கவும், விவசாயிகளை பெரும் சந்தைகள், பதப்படுத்துவோர் மற்றும் நுகர்வோர்களுடன் ஒருங்கிணைக்கவும், காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற அழுகும் பொருட் களுக்கான விநியோக தொடர் மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திடவும், 275குளிர்பதன கிடங்குகளை விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சீரிய முறையில் பயன்படுத்திடவும் அறிவுறுத்தினார்கள்.

இவ்வாய்வு கூட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மாவட்ட வேளாண் துணை இயக்குநர்கள் மற்றும் விற்பனைக்குழு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் கோ.பிரகாஷ், நன்றியுரை வழங்கினார்கள்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

# நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது!

நெல்லை, ஆக.9-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு திசையன்விளையில் நேருஜி திடலில் இருந்து அமைதி பேரணி நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. பேரணி பழைய பேருந்து நிலையத்தை அடைந்ததும் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞான திரவியம்,மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,மாநில அணி நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், எரிக்ஜூடு, மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல்,மாவட்ட துணை செயலாளர்கள் மாஞ்சோலை மைக்கேல்,ப. தமயந்தி பொதுக்குழு உறுப்பினர் ராமசந்திரன்,சாந்திசுபாஷ், ஒன்றிய கழகச் செயலாளர்கள்.

ஜோசப்பெல்சி,வி.எஸ். ஆர்.ஜெகதீஸ், சுடலை கண்ணு,செல்வகருணாநிதி, பேரூர் கழகச் செயலாளர்கள் ஜான் கென்னடி,சேது ராமலிங்கம்,அயூப் கான், பார்வதி மோகன்,மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அலெக்ஸ் அப்பாவு,மல்லிகாஅருள், மாடசாமி,என்.முருகன்,பிரேமா,

எஸ்.என்.முருகன், கேசவன் சகாயபிரபு,நெல்லை ஏ.ஆர்.ரஹ்மான்,ராஜா, துணை அமைப்பாளர்கள் சதிஷ்,வாசுதேவன் பண்ணையார், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் அருண் தபசுபாண்டியன் பன்னீர்செல்வம்,அந்தோணி செல்வம் சக்திகுமார், ஞானராஜ்,நஸ்ருதீன், கோபி சிவா,சேவியர் ஜார்ஜ்,

அப்துல் காதர்,மகளிர் அணி கமலா சுயம்பு ராஜன்,மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் ஜெனிபர், வலைதள பொறுப்பாளர் ஐஸ்வர்யா சக்திவேல் அணி துணை அமைப்பாளர்கள் நசுருதீன், சுவிகர், ஆண்ட்ரோ ஜேசன் நவநீதகிருஷ்ணன், லிங்கதமிழரசன், ஞானராஜ் மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் பரிமளம் கருணாநிதி, பலவேசம், கிழக்கு

ஒன்றிய அவைத் தலைவர் முத்துராம லிங்கம், ஒன்றிய துணை செயலாளர் தனபால்,ஒன்றிய பொருளாளர் வீனஸ் வீரஅரசு, முன்னாள் ஒன்றிய பொருளாளர் பார்க்க நெறி பரமசிவம் கிளைச் செயலாளர் பிரகாசம், கஸ்தூரிரங்கபுரம் பேச்சாளர் மாசாணம்,ஒன்றிய பிரதிநிதி சித்திக் கிளை செயலாளர்கள் தாஜுதீன்,அல்போன்ஸ் ஒன்றிய நிர்வாகிகள்ஜெயராஜ் முன்னாள் கூட்டுறவு சங்க செயலாளர் தன்ராஜ் சாமுவேல், முன்னாள் கவுன்சிலர் முட்டை முத்து, வார்டு செயலாளர்கள் பழனியாண்டி என்ற ஐயப்பன், அருண்குமார்,சுரேஷ்,இஸ்ரவேல் ஜெயசேகர்,சீனிவாசன்,டேவிட் அசன் அலி,செந்தில்,கிறிஸ்டோபர் சக்திவேல்,பாலா இராதாபுரம் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஆசிக் முகமது கழக முன்னோடிகள் விமலன்,

முருகன்,சேர்மதுரை,கல்யாண சுந்தரம், சக்திவேல்,பாதுஷா, கவிஞர் ரியாத், பட்சித்துரை கேஸ் சுந்தரம்,துரை,மணிகண்டன், மாரிமுத்து,பேச்சி முத்து, சிவன்ஆறுமுகம், செல்வராஜ், பெயிண்டர் மகேஷ்,பாம்பே முருகன்,

சாகுல்,டைலர் ராஜன், ராஜா, பிரசாத், ரமேஷ், முருகன், இராதாபுரம் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அன்றோ சந்தியாகு அக்ஸில், இராதாபுரம் மேற்கு ஒன்றிய இளைஞரணி அருண் ஜெபசிங், இராதாபுரம் மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெகதீஸ், கிளைச் செயலாளர்கள் சேகர், சாகுல் ஹமீது,சந்தோஷ், விஜயாபதி ஊராட்சி இளைஞர்கள் ஆவுடை ஜெய லிங்கம், ரிஸ்வான், மீரான், மைதீன், ஊர்ப் பெரியவர்கள் பீர் முகமது,ரசூல், அமீர்,அலி ஷேக்

திசையன்விளை பேரூராட்சி கவுன்சிலர்கள் நடேஷ் அரவிந்த், ஆறுமுக தேவி லிங்கராஜ், பிரேம் குமார்,அய்யா குட்டி உள்பட கழகத்தினர்,பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் - அமைதிப்பேரணி!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில்

தென்காசி.ஆக.9.

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதலமைச்சர் - கழக தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவேந்தல் முன்னிட்டு புளியங்குடி நகர கழக அலுவலகத்தில் இருந்து அமைதி பேரணி தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.

பேரணி புளியங்குடி நகர கழக அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு டி.என். புதுக்குடி காமராஜர் சிலை அருகில் வந்து நிறைவு பெற்றது.அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்க வேலு,யு.எஸ்.டி. சீனிவாசன், பரமகுரு, அவைத் தலைவர் பத்மநாதன்,பொருளாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் சாகுல் ஹமீது, தேவதாஸ், மகேஸ்வரி, பராசக்தி, ஒன்றிய செயலாளர்கள் பொன்.முத்தையா பாண்டியன், லாலா சங்கரபாண்டியன், பூசைபாண்டியன், கடற்கரை, பெரியதுரை

சேர்மதுரை,கிறிஸ்டோபர், பால்ராஜ் வெள்ளத்துரை, ராமச்சந்திரன், குணசேகரன், நகர செயலாளர்கள் அந்தோணிசாமி (புளியங்குடி)பிரகாஷ் (சங்கரன்கோவில்) மருத்துவரணி துணை செயலாளர் செண்பகவிநாயகம், தீர்மான குழு உறுப்பினர் சரவணன், பேரூர் செயலாளர்கள் மாரிமுத்து,கே.டி. சி. குருசாமி,சேது சுப்பிரமணியன்,ரூபி பாலசுப்பிரமணியன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் முகேஷ், உதயகுமார் கிப்ட்சன், ஜலால், ரஜினிகாந்த், பிச்சையா, புளியங்குடி நகர மன்ற தலைவர் விஜயா உள்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சிக்கு சான்றிதழ் வழங்கும் வகையில் மதுரை தெற்கு மாவட்டம் கள்ளிக்குடி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மருதங்குடி, எஸ்.வெள்ளாகுளம், சுந்தரங்குண்டு, வேப்பங்குளம், இலுப்பகுளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அ.தி.மு.க., தே.மு.தி.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் 500 க்கும் மேற்பட்டோர் தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் கழக நிர்வாகிகள் கே.எஸ்.ராமமூர்த்தி, மதன்குமார், கே.ஐ.மகிழன், எம்.முத்துராமலிங்கம், நாகராஜன், பி.எஸ்.என்.எல். செல்வம், ஆதவன் அதியமான் மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்

## சிவகங்கை மாவட்டத்தில்

# 90 கண்மாய்கள் ரூ. 50 கோடியில் சீரமைப்புப் பணிகள்!

## மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, ஆக.9-

சிவகங்கை ஒன்றியம் காஞ்சிரங்கால் ஊராட்சி இலந்தங்குடிபட்டி,சோழபுரம் ஊராட்சி பெருமாள் பட்டி ஆகிய ஊர்களின் கண்மாய்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ருபாய் 60லட்சத்தில் சீரமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் துவக்கி வைத்தார் .

இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர்கள் கே. எஸ் .எம். மணி முத்து, சேவியர், மாவட்ட திட்ட அலுவலர் சிவராமன், தனியார் தொண்டு நிறுவனங்களின் இயக்குனர் அருண் கிருஷ்ணமூர்த்தி, வட்டாட்சியர் சிவராமன், சிவகங்கை ஒன்றிய ஆணையாளர் செழியன் மற்றும் கிராம அதிகாரிகள் பொது மக்கள் கலந்து கொண்டார்கள். கடந்த மூன்று, 2022-2024மூன்று ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டத்தில் 90 நீர்நிலைகள் தனியார் தொண்டு நிறுவன பங்களிப்புடன் சீரமைக்கப்பட்டு வருகிறது.இதற்காக ரூபாய் 495 . 81 லட்சம் நிதி செலவிடப்பட்டு வருகிறது.

சிங்கம்புணரி வட்டாரத்தில் 12 கண்மாய்கள் ரூபாய் 26. 34 லட்சத்திலும் எஸ். புதூர் ஒன்றியத்தில் 13 பணிகள் ரூபாய் 32.51 லட்சத்திலும், திருப்பத்தூர் வட்டாரத்தில்9 பணிகள் ரூபாய் 17.16லட்சத்திலும், சிவகங்கை வட்டாரத்தில் 7 பணிகள் ரூபாய் 12.51 லட்சத்திலும், கல்லல் வட்டாரத்தில் 8 பணிகள் 15. 83 லட்சத்திலும், காளையார் கோயில் வட்டாரத்தில் 10 பணிகள் 21. 04 லட்சத்திலும், தேவகோட்டை வட்டாரத்தில் 4பணிகள் ரூபாய் 8.12 லட்சத்திலும் இளையான்குடி வட்டாரத்தில் 4 பணிகள் ரூபாய் 12,02லட்சத்திலும், சாக்கோட்டை வட்டாரத்தில் 2 பணிகள் ரூபாய் 21.00 லட்சத்திலும் மேற்கொள்ளப்பட்டு இதில் ஒரு சில பணிகள் முடிவுற்று மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

இந்த பணிகளில் கண்மாய் வடிகால் ,சீரமைத்தல், கருவேல மரங்கள் வெட்டுதல், கண்மாய் கரைகளை வலுப்படுத்துதல்உட்பட விவசாயிகள் மக்களுக்கு பயன்படும் வகையில் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது சிவகங்கை ஒன்றியத்தில் இன்று ரூபாய் 60 லட்சம் செலவில் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களும் விவசாயிகளும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி குடிநீர் ஆதாரத்திற்கும் விவசாயத்தின் மேம்பாட்டிற்கும் பயன்படுத்து. மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு திருப்பணி முக்கில் இருந்து அமைதிப் பேரணி மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. உடன் அப்துல் கையூம், நமச்சிவாயம், பூ.சுப்பிரமணியன், அன்டன் செல்லதுரை, சௌந்தரம், பிந்து செய்யது, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.பேரணி சந்திப் பிள்ளையார் கோவிலை அடைந்ததும் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.